தமிழர் கல்விப் மேம்பாட்டுப் பேரவை
TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# தமிழ்மொழி

## மதிப்பீட்டுத் தாள்

## 2022-2023

## வளர்தமிழ் 11

சுட்டெண்: | | | | | | | | | |

நேரம்: 180 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

TEDC - FRANCE
TEDC - FRANCE
TEDC

## 1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.

1. ஒருவனுடைய இன அடையாளத்தைக் காட்டுவது

அ) பொருள் ☐ ஆ) பணம் ☐
இ) செல்வம் ☐ ஈ) மொழி ☐

2. புகாரின் மறுபெயர்

அ) நாகபட்டினம் ☐ ஆ) கன்னியாகுமரி ☐
இ) மதுரை ☐ ஈ) காவிரிப்பூம்பட்டினம் ☐

3. தனது இல்லத்தில் இலவய நூல் நிலையத்தைத் தொடக்கியவர்

அ) கே.நரசிம்மன் ☐ ஆ) க.மு.செல்லப்பா ☐
இ) ஆர். இரங்கநாதன் ☐ ஈ) சாம் சபாபதி ☐

4. பகுதியையும் இடைநிலையையும் இணைக்கும் சொல் உறுப்பு

அ) விகுதி ☐ ஆ) சாரியை ☐
இ) சந்தி ☐ ஈ) பகுதி ☐

5. முழங்குகடல் என்பது

அ) வினைத்தொகை ☐ ஆ) உவமைத்தொகை ☐
இ) உம்மைத்தொகை ☐ ஈ) பண்புத்தொகை ☐

6. கற்பின் கொழுந்து! உலகப் பேரொளி! எனப் பாராட்டப்பட்டவர்

அ) வேண்மாள் ☐ ஆ) கண்ணகி ☐
இ) மாதவி ☐ ஈ) ஐயை ☐

TEDC

7. தென்னையின் பிஞ்சுக்குரிய மரபுப்பெயர்

அ) வடு ☐ ஆ) கச்சல் ☐

இ) மூசு ☐ ஈ) குரும்பை ☐

8. மாதவியின் மடலுடன் வந்தவர்

அ) கௌசிகன் ☐ ஆ) தேவந்தி ☐

இ) கவுந்தியடிகள் ☐ ஈ) மாசாத்துவன் ☐

9. இருமுது குரவர் எனப்படுவோர்

அ) நண்பர் ☐ ஆ) பெற்றோர் ☐

இ) உடன்பிறந்தோர் ☐ ஈ) உறவினர் ☐

10. நண்பகல் என்பதன் எதிர்ச்சொல்

அ) வைகறை ☐ ஆ) இரவு ☐

இ) நள்ளிரவு ☐ ஈ) மாலை ☐

11. யாழ்நூலகத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்ட ஆண்டு

அ) 1959 ☐ ஆ) 1981 ☐

இ) 1933 ☐ ஈ) 1954 ☐

12. வரகு, கயிறு, முதுகு என்பன

அ) உயிர்த்தொடர்க்குற்றியலுகரம் ☐

ஆ) நெடிற்றொடர்க்குற்றியலுகரம் ☐

இ) இடைத்தொடர்க்குற்றியலுகரம் ☐

ஈ) ஆய்தத்தொடர்க்குற்றியலுகரம் ☐

TEDC

13. பெண்ணடிமைத்தனத்தைச் சாடிக் கவிதை எழுதியவர்

அ) சாலைஇளந்திரையன் ☐ ஆ) இரவி ☐

இ) அம்பி ☐ ஈ) உதயைவீரையன் ☐

14. "தேரா மன்னனைக் கண்டு முறை கேட்பேன்." இங்கு தேரா என்பது

அ) சினந்து ☐ ஆ) ஆராய்ந்து ☐

இ) ஆராயாது ☐ ஈ) இகழ்ந்து ☐

15. புதரில் வாழும் உயிரிகளில் ஒன்று

அ) நண்டு ☐ ஆ) நரி ☐

இ) காகம் ☐ ஈ) குதிரை ☐

16. கண்ணகியிடம் "பெண்ணே இந்நகரில் யார், யார் பிழைக்க வேண்டும்" எனக் கேட்டவன்

அ) இந்திரன் ☐ ஆ) தீக்கடவுள் ☐

இ) கதிரவன் ☐ ஈ) சிவன் ☐

17. புறாவுக்காகத் தன் உடலை அரிந்து கொடுத்த மன்னன்

அ) சிபி ☐ ஆ) மனுநீதி ☐

இ) குமணன் ☐ ஈ) எல்லாளன் ☐

18. மகனை இழந்த தாயின் கண்களில் இருந்து பொலபொல எனக் கண்ணீர் வடிந்தது. இதில் பொலபொல என்பது

அ) அடுக்கிடுக்குத்தொடர் ☐ ஆ) இணைமொழி ☐

இ) அடுக்குத்தொடர் ☐ ஈ) இரட்டைக்கிளவி ☐

19. வட்டக்கல் என்பதைப் பிரித்தெழுதினால்

அ) வட்டம் + கல் ☐ ஆ) வட்டக் + கல் ☐

இ) வட்ட + கல் ☐ ஈ) வட்டு + கல் ☐

20. ஏழிலுக்குத் துணையாக வாசிக்கப்படும் தாள இசைக்கருவி

அ) புல்லாங்குழல் ☐ ஆ) வயலின் ☐

இ) வீணை ☐ ஈ) தவில் ☐

21. ஆந்தை அலறும். அது போல ஓநாய்

அ) ஊளையிடும் ☐ ஆ) குரைக்கும் ☐

இ) கத்தும் ☐ ஈ) கனைக்கும் ☐

22. இனவெழுத்து இல்லாத மெய்யெழுத்துக் கூட்டம்

அ) க்,ச்,ட்,த்,ப்,ற் ☐ ஆ) ங்,ஞ்,ண்,ந்,ம்,ன் ☐

இ) ய்,ர்,ல்,வ்,ழ்,ள் ☐ ஈ) க்,ங்,ஞ்,ய்,ர்,ல் ☐

23. யாழ்நூலகம் ____________ க் கட்டிடக் கலையை வெளிப்படுத்துகின்றது.

அ) ஐரோப்பிய ☐ ஆ) ஆரிய ☐

இ) சீன ☐ ஈ) திராவிட ☐

24. புதுக்கவிதை தோன்றிய நூற்றாண்டு

அ) 18 ஆம் நூற்றாண்டு ☐ ஆ) 19 ஆம் நூற்றாண்டு ☐

இ) 20 ஆம் நூற்றாண்டு ☐ ஈ) 17 ஆம் நூற்றாண்டு ☐

TEDC

25. எடுத்தான் என்ற வினைமுற்றின் பெயரெச்சம்

அ) எடுத்த ☐ ஆ) எடு ☐

இ) எடுத்து ☐ ஈ ) எடுப்பான் ☐

26. இடித்துரைத்தல் என்ற மரபுச் சொற்றொடரின் பொருள்

அ) சூளுரைத்தல் ☐ ஆ) எதிர்த்துப் பேசுதல் ☐

இ) அறிவுரை கூறுதல் ☐ ஈ ) கவனமாக இருத்தல் ☐

27. நான்காவது தமிழாராய்ச்சி மாநாடு நடைபெற்ற இடம்

அ) மலேசியா ☐ ஆ) சிங்கப்பூர் ☐

இ) அமெரிக்கா ☐ ஈ ) யாழ்ப்பாணம் ☐

28. மலையின் கண் அருவி என்பது

அ) ஏழாம் வேற்றுமை ☐ ஆ) ஐந்தாம் வேற்றுமை ☐

இ) எட்டாம் வேற்றுமை ☐ ஈ ) ஆறாம் வேற்றுமை ☐

29. கலைநயம் மிக்க சிலைகளைச் செதுக்கினேன். இச் சொல்லியத்தின் தோன்றா உறுப்பு

அ) பயனிலை ☐ ஆ) அடைமொழி ☐

இ) செயப்படுபொருள் ☐ ஈ ) எழுவாய் ☐

30. யாழ்நூலகம் அனலுக்குள் பொசுங்குவதைக் கேள்வியுற்று அதிர்ச்சியில் உயிர் நீத்தவர்

அ) தாவீது அடிகள் ☐ ஆ) தனிநாயகம் அடிகள் ☐

இ) விபுலாநந்த அடிகள் ☐ ஈ ) ஆறுமுகநாவலர் ☐

புள்ளிகள் 30



TEDC

## 2) பந்தியை வாசித்து வினாக்களுக்கு முழுவிடை தருக.

மாந்தர் பொருள் தேடுவதற்காக ஊர்விட்டு ஊர்களுக்குச் செல்கிறார்கள், சிலர் அங்கேயே தங்குகின்றார்கள். மாந்தரைப் போலவே பறவைகளும் வேறு நாடுகளுக்குச் சென்று திரும்புகின்றன. அதே போல சில பறவைகள் கண்டம் விட்டுக் கண்டம் பறந்து செல்கின்றன. அவை பெரும் கடல்களையும் மலைகளையும் கடந்துபோய் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பின்னர் புறப்பட்ட இடத்துக்கே வந்து சேர்கின்றன. இவ்வாறு பறவைகள் இடம் பெயர்தலை வலசைபோதல் என்பர். உணவு, இருப்பிடம், தட்பவெப்ப மாற்றம், இனப்பெருக்கம் போன்றவற்றிற்காகவே பறவைகள் இடம்பெயர்கின்றன. நிலவு, விண்மீன், புவியீர்ப்பு, புலம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டே பறவைகள் இடம்பெயர்கின்றன. பறவைகள் பொதுவாக வடக்கிலிருந்து தெற்கு நோக்கியும் மேற்கில் இருந்து கிழக்கு நோக்கியும் செல்கின்றன. பறவைகள் தங்களுக்கென ஒரு வழித்தடத்தைத் தேர்ந்தெடுத்து அந்தப் பாதையிலேயே பறக்கின்றன. சில பறவையினங்கள் அதே பாதையில் தாய் நிலங்களுக்குத் திரும்புகின்றன. இடம்பெயர்ந்துபோகும் சில வகைப் பறவைகள் இரைக்காகவும் ஓய்வுக்காகவும் தரையிறங்கும். இடையில் எங்கும் தங்காமல் பறந்து வாழிடம் சேரும் பறவைகளும் உண்டு. பறவைகள் வலசைபோவது பற்றி இலக்கியங்களில் கூறப்பட்டுள்ளன. பல நூற்றாண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த சத்திமுற்றப்புலவர் நாராய் நாராய் செங்கால் நாராய் என்னும் பாடலில் ''தென் திசைக் குமரியாடி வடதிசைக்கு ஏகுவீராயின்'' என்னும் அடிகள் மூலம் பறவைகள் வலசைபோகும் செய்தியைக் குறிப்பிடுகின்றார்.

1. எவற்றை அடிப்படையாகக் கொண்டு பறவைகள் இடம்பெயர்கின்றன?

2. இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ள செய்தி யாது?

3. இடப்பெயர்வின்போது எவற்றிற்காகப் பறவைகள் தரையிறங்குகின்றன?

4. இங்கு வந்துள்ள புலவரின் பெயர் யாது?

5. பறவைகள் ஏன் இடம்பெயர்கின்றன?

புள்ளிகள் 10

## 3) பாடநூல் வினா ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.

1. கழக இலக்கியங்கள் குறைந்த சொல்லாட்சியுடன் அமைந்ததற்கான கரணியம் யாது?

______________________________

2. சிலப்பதிகாரம் எவ்வாறு புகழப்படுகிறது?

______________________________

______________________________

3. நூல் நிலையங்கள் எந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் தோற்றம் பெற்றன?

______________________________

4. மானிடா சொல் என்ற கவிதையில் இறைவனின் சார்பில் கவிஞர் கூறும் மறைபொருள் என்ன?

______________________________

______________________________

5. ‘காய்கதிர்ச் செல்வனே!’ என கண்ணகி யாரைக் குறிப்பிடுகின்றார்?

______________________________

6. “யார் பெண்ணே நீ? ஏன் இந்தக் கோலம்?” என்று யாரால், யாருக்குக் கூறப்பட்டது?

______________________________

______________________________

7. நூலகப்பணிக்காக உருவாக்கப்பட்ட குழுவின் தலைவராக இருந்தவர் யார்?

______________________________

புள்ளிகள் 10

TEDC

**4. பத்து வரிகளுக்குக் குறையாமல் படத்தைப் பார்த்துக் கவிதை எழுதுக. அல்லது கீழுள்ள கவிதையைத் தொடர்ந்து எழுதுக.**

TEDC

1.



2. என்றும் இளமை குன்றா மொழியே
ஈடே இல்லா தமிழரின் விழியே

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

TEDC

| புள்ளிகள் 10 |
|---|

## 5) அ) பந்தியை வாசித்து இலக்கண வினாக்களுக்கு விடை எழுதுக.

தோட்டத்தில் தண்ணீர் பாய்ச்சி விளைந்த பயிர்களை ஒளிர்நிலா தன் மலர்க்கைகளால் தொட்டுணர்ந்து மகிழ்கின்றாள். ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு என தோட்டத்திலுள்ள ஒவ்வொரு பாத்தியையும் பாய்ந்துபாய்ந்து எண்ணி விளையாடுகின்றாள். தோட்டத்திலுள்ள கமுகமரங்களில் இருந்து பாக்குகள் காற்றினால் நிலத்தில் வீழ்ந்து குவியல்குவியலாகக் காணப்படுகின்றன. மதமத எனச் செழித்து நின்ற வாழைமரங்கள் குலைகளுடன் காணப்படுகின்றன. பாகல் தன் கொழுகொம்பிலே படர்ந்து நிற்கின்றது.

1. இறந்தகாலப் பெயரெச்சம் ஒன்று தருக.

_______________________________________________

2. பொதுமொழி ஒன்று தருக.

_______________________________________________

3. மலர்க்கை என்பது எவ்வகைத் தொகை?

_______________________________________________

4. இரண்டு, மூன்று என்பவை எவ்வகைக் குற்றியலுகரம்?

_______________________________________________

5. நிற்கின்றது என்ற சொல்லின் பகுதியை எழுதுக.

_______________________________________________

6. அடுக்குத்தொடருக்கு இரண்டு எடுத்துக்காட்டுகள் தருக.

_______________________________________________

TEDC

7. பண்புத்தொகைக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

______________________________

8. வினையெச்சம் ஒன்று தருக.

______________________________

9. இருபெயரொட்டுப் பண்புத்தொகைக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

______________________________

10. இடப்பெயருக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

______________________________

புள்ளிகள் 10

**ஆ) 1. பின்வரும் குற்றியலுகரச் சொற்களை வகைப்படுத்தி எழுதுக.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பேச்சு | சால்பு | உப்பு | மாசு | மூழ்கு | ஆறு |

| **நெடிற்றொடர்க் குற்றியலுகரம்** | **வன்றொடர்க் குற்றியலுகரம்** | **இடைத்தொடர்க் குற்றியலுகரம்** |
|---|---|---|
| | | |
| | | |

புள்ளிகள் 03

**2. பின்வரும் அடுக்குத் தொடர்களின் பொருள் விளங்குமாறு சொல்லியங்கள் எழுதுக.**

உழைத்து உழைத்து ______________________________

மடித்து மடித்து ______________________________

புள்ளிகள் 02

**6) தரப்பட்டுள்ள சொற்குவியலில் இருந்து கருத்துக்குப் பொருத்தமான பழமொழிகளைக் கண்டறிந்து எழுதுக.**

TEDC

குற்றமுள்ள

நெஞ்சு

குற்றம்

சுமக்கும்

துள்ளினமாடு

பொதி

மனமுண்டானால்

பாடின்றிப்

சுற்றமில்லை

இடமுண்டு

பார்க்கின்

பட்டமில்லை

குறுகுறுக்கும்

1. மனச்சான்று உறுத்தும்.

___

2. அடக்கமின்மை துன்பம் தரும்.

___

3. உறவினர் குறை பாராட்டலாகாது.

___

4. முயற்சி இன்றி உயர்ச்சி இல்லை.

___

5. விரும்பினால் இல்லாதவனும் ஈயலாம்.

___

TEDC

புள்ளிகள் 05

## 7) பந்தியை உமது வாழிடமொழியில் மாற்றி எழுதுக.

**உலகில் உள்ள எல்லோருக்கும் மிகவும் அகத்தியமானது கல்வி. பழைய காலத்தில் எல்லோருக்கும் கல்வி கற்கும் வாய்ப்பு இருக்கவில்லை. ஆனால் இக்காலத்தில் எமக்கு விரும்பிய துறைகளில் கற்பதற்கு வாய்ப்புகள் உள்ளன. எனவே நாம் இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி நன்கு கற்க வேண்டும். அவ்வாறு கற்றோமானால் நாம் வாழ்வில் உயர்வடையலாம்.**

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

புள்ளிகள் 05

**8) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 200 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- ✸ யாழ் நூலகம்
- ✸ ஓடிடும் தமிழா கவிதையும் இன்று தமிழரின் நிலையும்
- ✸ நான் விரும்பும் தொழில்
- ✸ உலகக்கிண்ணக் காற்பந்தாட்டப் போட்டி

புள்ளிகள் 15